06.11.2025

அ.வ.எண்.146/2018

வா.சா.2 - திரு.போஜராஜன், த/பெ.ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 06.11.2025 is accordance with the provision of Act X of 3331

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 25.03.1996 தேதியில் பழனியப்பனிடம் ஒரு பவர் பத்திரம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அப்போது பழனியப்பன் ராமநாதபுரத்தில் குடியிருந்தார். ராமநாதபுரம் முகவரியை குறிப்பிடமல் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுகத்தேவரின் வீட்டு முகவரியை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனியப்பனின் வாரிசுகள் அனைவருக்கும் ஒரே முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கூட்டு குடும்பமாக இருந்தார்கள். பெண்கள் திருமணம் ஆகி வெளியே சென்றுவிட்டார்கள் என்றும், அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பவர் ஆவணம் மூலமாக பழனியப்பனிடம் 50 சென்ட் நிலத்தை பெற்றேன்.

2. மேற்படி 50 சென்ட் நிலமானது எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது என்றால் பழனியப்பன் 50 சென்ட்டிற்குண்டான காட்டுப்பத்திரத்தை கொண்டு வந்திருந்தார். 25.09.1956 ம் பத்திரப்படி, பழனியப்பனுக்கு 51 ¼ சென்ட் பாத்தியம் என்றால் தெரியாது, 50 சென்ட்டை நான் வாங்கினேன். பழனியப்பனுக்கு தெரியாமல் 50 சென்ட் என குறிப்பிட்டு பவர் ஆவணம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. பவர் ஆவணத்தின் படி பழனியப்பனின் சொத்து, பிரதிவாதியின் சொத்திற்கு மேற்கில் உள்ளதா அல்லது கிழக்கில் உள்ளதா என்றால் கிழக்கில் உள்ளது. அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல.

3. பழனியப்பனுக்கும், பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு நில அபகரிப்பு கோயம்புத்தூர் அலுவலகத்திற்கு சென்று பேசி முடித்து அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டபப்படும் ஆவணத்தில், பத்திர எண்.4608/2011 தொடர்பாக தொடர்ந்துள்ள சிவில் வழக்கின் தீர்ப்பின்படி நாங்களும் நடந்துகொள்கிறோம் என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **13.03.2012 தேதியில் பழனியப்பன், நில அபகரிப்பு சிறப்பு தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்த புகார் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** வா.சா.ஆ.6 பாகபாத்திய விடுதலை பத்திரத்தில், பிரதிவாதி சொத்து பழனியப்பன் சொத்திற்கு கிழபுறம் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், பழனியப்பனிடம் பவர் ஆவணம் எழுதும்போது பிரதிவாதிகளுடைய பூமியை செக்குபந்தி போட்டு எழுதியுள்ளதால் அந்த பவர் ஆவணம் பிரதிவாதியின் சொத்தை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பவர் ஆவணத்திற்கு ரூ.65,000/- ரசீது பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 25.03.1996 ம் தேதியில் நான் பவர் பெற்றேன். பவர் கொடுப்பதற்கு முன்பாக 22.01.1996, 02.02.1996 ஆகிய தேதிகளில் பணம் பெற்றதாக ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.மேற்படி ரசீதை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

5. மோசடியாக எழுதப்பட்ட பவர் ஆவணத்திற்கு ஆதரவாக ரசீது ஏற்பட்டுள்ளதால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பின்னிட்டு வசந்தாமணி, ஜெயமணி, பாக்கியம் ஆகியோர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரயத்திற்கு சயிட் எண் போட்டு அளந்து கொடுத்தேனா என்றால் ஆமாம். அது அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை என்றால் சரிதான். பவர் ஆவணம் தவறாக எழுதியதால் அந்த சயிட்டுகளை பிரதிவாதிகளின் இடத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

6. வசந்தாமணி, அந்த சொத்துக்களை வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஜெயமணி என்பவர் சண்முகத்திற்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சிவபாக்கியம், லீலாவதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ராணி என்பவர் அசோக் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரயங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான், வாதியின் வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வழக்கு பரிகாரம்

கிடைக்கத்தக்கது என கோர எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur